**திருவள்ளூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
பிறப்பிப்பவர்:திரு.த.இராமன், எம்.எஸ்ஸி., பி.எட்.,

---

ந.க.எண்.1343/அ1/2023 நாள்: .04.2023

பொருள்: பள்ளிக் கல்வி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் நியமனம் – திருவள்ளூர் மாவட்டம் - திருவள்ளூர் கல்வி மாவட்டம்– தோமூர் அரசு உயர்நிலைப்பள்ளி – இளநிலை உதவியாளர் திரு.எம்.முரளி என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 07.06.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: 1.திருவள்ளூர், மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.2194/அ1/ 2017–1 நாள். .06.2017
2. அரசாணை(நிலை) எண்.80/பள்ளிக்கல்வித் துறை நாள்.02.03.2016
3. அரசாணை(நிலை) எண்.101/பள்ளிக்கல்வித் துறை நாள்.18.05.2018
4.அரசாணை (நிலை) எண்.48/தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.26.02.2021
5.அரசாணை எண்.151, ப.க.SE1(1), துறை, நாள்.09.09.2022
6.தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.70588/ஜே/இ4/2018 நாள்.10.11.2018
7. திருவள்ளூர், மாவட்டக் கல்வி அலுவலரின் கடித ந.க.எண்.11/அ1/2023 நாள். .02.2023

------

ஆணை

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் கல்வி மாவட்டம் திருத்தணி வட்டம், மத்தூர், அரசு மேல்நிலைப்பள்ளியில் இரவுக்காவலராக பணிபுரிந்து பணிக்காலத்தில் 09.11.2010 அன்று காலமான திரு.முனுசாமி, என்பவரின் வாரிசுதாரர் திரு.எம்.முரளி என்பவருக்கு பார்வை 1–இல் காணும் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு 07.06.2017 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். இப்பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யக்கோரி, பார்வை 7–இன்படி, கருத்துரு பெறப்பட்டுள்ளது.

பார்வை 4–இல் காணும் அரசாணை பத்தி 5.1 மற்றும் 5.2ல் கீழ்க்காணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5.1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில்.உள்ள விதிகளுக்குட்பட்டு பணிவரன்முறைப்படுத்தப்படுகிறது.

(5.2) மேலே பத்தி 5.1ல் உள்ள ஆணையினை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறைசெய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசுப் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

எனவே, தனியருக்கு எந்தவித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் பார்வை–4இல் காணும் அரசாணையின்படியும், பார்வை 7–இல்

காணும் மாவட்டக்கல்வி அலுவலரின் பரிந்துரையின் பேரில் திரு.எம்.முரளி என்பவர் கருணை ள.அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக நியமனம் பெற்ற நாளான 07.06.2017 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்கலாகிறது.

| வ.எண் | பெயர்/பதவி/பணிபுரியும் அலுவலகம் | இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திரு.எம்.முரளி,<br>இளநிலை உதவியாளர்,<br>அரசு உயர்நிலைப்பள்ளி,<br>தோமூர். | 07.06.2017<br>முற்பகல் | 07.06.2017<br>முற்பகல் |

நிபந்தனைகள்:

1. மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டிற்குள் தகுதிகாண் பருவத்தை முடிக்க வேண்டும்.
2. தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள்(பணி நிபந்தனைகள்) சட்டம் 2016பிரிவு 31(4)ல் தெரிவித்துள்ளவாறு தகுதிகாண் பருவ காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்ச்சி பெற வேண்டும்
3. தகுதிகாண்பருவ காலத்திற்குள் பவானிசாகர் அடிப்படை பயிற்சி முடித்திருக்க வேண்டும்.
4. தகுதிகாண் பருவம் முடிக்கபட்ட பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் வழங்க இயலும்.

மேற்காண் பணியாளருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட விவரத்தினை சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்து மேற்காண் பணியாளரின் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. பணிப்பதிவேடு பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதலை அனுப்பி வைக்குமாறு சார்ந்த அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு: பணிப்பதிவேடு

10/4/22

முதன்மைக் கல்வி அலுவலர்

10/4/22 திருவள்ளூர்

பெறுநர்

சம்பந்தப்பட்ட பணியாளர் (சார்ந்த அலுவலர் வழியாக )

நகல்

1. மாவட்டக் கல்வி அலுவலர், திருவள்ளூர் (இடைநிலை)
2. தலைமை ஆசிரியர், அரசு உயர்நிலைபள்ளி, தோமூர்.